REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 31உ சனி (14—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 1உ ஞாயிறு (15—5—55) [இதழ் 285

620 இடங்களுக்கு தொழிற்கட்சி போட்டியிடும்

லண்டன், மே 13—

வரும் மே 26-ந் தேதி நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில், தொழிற்கட்சி, மொத்தம் உள்ள 630 இடங்களில் 620 இடங்களுக்குப் போட்டியிடும் என்று கட்சிப் பொதுச்செயலாளரான மார்கன் பிலிப்ஸ் தெரிவித்திருக்கிறார்.

தொழிற்கட்சியுடன் இணைந்துள்ள 25 தொழிற்சங்கங்கள் நேரிடையாக 128 அபேட்சகர்களை நிறுத்தியுள்ளதாயும் அவர் தெரிவித்துள்ளார்.

'மொழிவழி மாநிலக் கோரிக்கை அடிப்படை உரிமையாகும்'

'இலட்சியம் ஈடேறும்வரை போராடுவோம்'

அகாலி தள் பொதுச்செயலாளர் அறிவிப்பு

அம்பாலா, மே 13—

"'பஞ்சாப் மாநிலம் வாழ்க! பஞ்சாபி மொழிவழி மாநிலம் வேண்டும்!' என்று முழக்கமிடுவது எங்கள் அடிப்படை உரிமையாகும்; அந்த உரிமைக் குரலை நாங்கள் கைவிட முடியாது;

"பஞ்சாபி மொழி வழங்கும் மாநிலம் வேண்டுமென்று கோருவோரைத் தண்டிக்க வேண்டுமென்ற விருப்பம் இருந்தால் ஒழிய, சர்க்காருக்கு, இந்தக் குரல் எழுப்பக் கூடாதென தடை விதிக்க வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை;

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

பாக் — ஆப்கன் தகராறு!

தீர்வு காண பல முஸ்லீம் நாடுகள் முயற்சி

பக்தூனிஸ்தான் பிரச்சினையைக் கிளப்பக்கூடாதென பாகிஸ்தான் நிபந்தனை

கராச்சி, மே 13—

பாகிஸ்தான்—ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே எழுந்துள்ள தகராறைத்தீர்த்து, சுமுகமான உறவை நிலைநாட்ட, வேறு இரு முஸ்லீம் நாடுகளான எகிப்தும், சவூதி அரேபியாவும் பெருமுயற்சி செய்து வருகின்றன.

இந்தத் தகராறை மத்தியஸ்தம் செய்துவைக்க தாம் தயாராக இருப்பதாக எகிப்து பிரதமர் நாசர் ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் சவூதி அரேபிய மன்னர், காபூலில் உள்ள தமது தூதுவர் மூலம் சமரச முயற்சிகளைச் செய்து வருகின்றார் எனத் தெரியவருகிறது.

இந்த இரண்டு முஸ்லீம் நாடுகளும் மோதிக்கொள்வதைத் தடுக்கும் சிறிய முயற்சியில், கராச்சியில் உள்ள வேறு பல முஸ்லீம் நாட்டு தூதுவர்களும் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

"ஆப்கானிஸ்தான், மே 15-ந் தேதிக்குள் கண்ணியமான திருத்தம் செய்ய வேண்டும்," என்று பாகிஸ்தான் நிபந்தனை விதித்துள்ளதல்லவா? அந்தக் கால வரையறை இன்னும் சில நாட்களுக்கு ஒத்திப் போடப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இதுமட்டுமின்றி, ஆப்கானிஸ்தானும், பாகிஸ்தானும் தங்களுக்கிடையேயுள்ள ராஜீய உறவுகளை முறித்துக் கொள்ளாமலிருப்பதற்காக உலகப் பெரும் வல்லரசுகளான அமெரிக்காவும், பிரிட்டனும்கூட முயற்சித்து வருகின்றன என்பதும் தெரிந்ததே!

"சமரசப் பேச்சுக்களுக்கு முன் நிபந்தனையாக பக்தூனிஸ்தான் பிரச்சினையை ஆப்கானிஸ்தான் கிளப்பக்கூடாது; அது உள்நாட்டைப் பொறுத்த பிரச்சினை," என்று பாகிஸ்தான் நிபந்தனை விதித்துள்ளதாயும், "பாகிஸ்தான் கொடிக்கு ஆப்கன் சர்க்கார் வணக்கம் செலுத்த வேண்டும்," என்று கோரியுள்ளதாயும் தெரிய வருகிறது.

ஆப்கன் சர்க்காரும், தங்கள் கொடி பெஷாவரில் அவமதிக்கப் பட்டதற்காக, பாகிஸ்தான் சர்க்கார் தங்கள் கொடிக்கு வணக்கம் செலுத்த வேண்டும் எனக் கோருகின்றனராம்.

★

ஆப்கன் மன்னர் - யுத்த மந்திரி சந்திப்பு

லாகூர், மே. 13—

ஆப்கானிஸ்தான் மன்னரான ஜாகிர் ஷா, ஆப்கன் யுத்த மந்திரியான ஜெனரல் முகம்மது அரிப்கான் என்பவருக்குப் பேட்டியளித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

காண்டகார், ஜலாலாபாத் ஆகிய மாநில கவர்னர்களும் மன்னரைச் சந்தித்தனராம். அவர்கள் என்ன பேசினர்கள் என்பதுபற்றிய செய்தி விவரமாகத் தரப்படவில்லையாம்.

★

பம்பாயில் சீக்கியர் ஆர்ப்பாட்டம்

மாஸ்டர் தாரா சிங் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் இன்று பம்பாயில் உள்ள பல சீக்கிய வியாபாரிகள் தங்கள் கடைகளை மூடினர்.

வாடகைக் கார் ஓட்டுபவர்களில் 300-க்கும் மேற்பட்ட சீக்கியர், காலையில் 3 மணி நேரத்திற்கு அதிகமாக, எவருக்கும் தங்கள் கார்களை வாடகைக்குவிட மறுத்துவிட்டனர் என்று தெரிகிறது.

தச்ச வேலையில் ஈடுபட்டிருக்கும் சீக்கியர்கள், தொழிற்சாலைகளுக்குச் செல்லாதிருந்து தங்கள் கண்டனத்தைக் காட்டியிருக்கின்றனர்.

பம்பாயில் சுமார் 40,000 சீக்கியர்கள் இருக்கக் கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்பு நடவடிக்கையை, சீக்கிய இளைஞர் கழகம் நடத்தியிருக்கிறது.

கம்யூனிஸ்டு இராணுவங்களுக்குக் கூட்டுத் தலைமை!

வார்சா மாநாட்டில் முடிவு

வட அட்லாண்டிக் ஒப்பந்தத்திற்கு எதிராக செஞ்சேனைகள் திரளுகின்றனவாம்

சோவியத் ரஷ்யாவும், இதர ஏழு கம்யூனிஸ்டு சார்பு நாடுகளும் கலந்துகொண்ட வார்சா மாநாட்டில், தங்கள் இராணுவத்திற்கு ஒரு கூட்டுத் தலைமை ஏற்படுத்திக் கொள்வதென முடிவு செய்திருப்பதாக செய்திகள் அறிவிக்கின்றன.

மேற்கு ஜெர்மனியையும் உள்ளடக்கிக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கும் அட்லாண்டிக் ஒப்பந்தத்திற்கு எதிர் அணியாகவே, கடந்த கம்யூனிஸ்டுகளின் மாநாட்டின் அறிக்கை இருக்கிறது என்று மேற்கத்திய நாடுகள் கருதுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

செஞ் சேனைகளின் கூட்டுத் தலைமையை அங்கீகரிக்கும் ஒப்பந்தம் இன்றையத் தினம் கையெழுத்தாகுமெனத் தெரியவருகிறது.

நட்புறவு, கூட்டுறவு, ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகிய அடிப்படையிலேயே அந்த எட்டு கம்யூனிஸ்டு நாடுகளின் ஒப்பந்தம் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யப் பிரதமர் புல்கானின் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, (கிழக்கு) ஜெர்மனி, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லாவேக்கியா ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

ஒப்பந்தத்தின் விளக்கம்

மேற்கண்ட இந்த ஒப்பந்தத்தைப் பற்றி ரஷ்யப் பத்திரிகையான 'பிராவ்டா' எழுதியிருப்பதாவது:—

"இந்த ஒப்பந்த நாடுகளில் ஏதாவது ஒன்று தாக்கப்பட்டாலும், அதற்கு உதவியாக ஒப்பந்த நாடுகள் அனைத்தும் திரண்டெழும்பும். இந்தப் புதிய பொது இராணுவத்திற்கு ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட அளவு படைகளை ஒதுக்குவதுடன், தங்கள் தங்கள் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ளவும் இதர கூட்டு நடவடிக்கைகளை அந்த நாடுகள் மேற்கொள்ளும். இந்த 8 நாடுகள் மட்டுமே அல்லாமல், மேற்கண்ட இவ்வொப்பந்தத்தில் வேறெந்த நாடுகளும் சேருவதற்கும் தடையில்லை. இது, 'தற்காப்பு ஒப்பந்தமே தான் வகுக்கப்படுகிறது' என்பதையும் நன்கு நிரூபிக்கிறது."

மேலும் அது எழுதியிருப்பதாவது:—

"அணு ஆயுதங்கள், நச்சுப்புகை, கிருமி ஆயுதங்கள் ஆகியவைகளைக் கொண்டு மேற்கு ஜெர்மன் இராணுவத்தைத் திரட்டுவதற்கான வழி செய்யப்பட்டிருக்கிறது. அட்லாண்டிக் ஆக்கிரமிப்புக் குழுவில் மேற்கு ஜெர்மனியும் ஒரு அங்கமாக சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஐரோப்பா கண்டத்தில் ஒரு 'போர்க் களம்' பண்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது."

பிரிட்டன் தொடர்பை ரத்து செய்க!

கொழும்பு நகர சபை தீர்மானம்

பிரிட்டனுடன் செய்துகொண்டுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையை ரத்து செய்துவிடும்படியும், இலங்கையிலுள்ள அந்நிய இராணுவ தளங்கள் அனைத்தையும் இலங்கையைவிட்டு அகற்றிவிடும்படியும், இலங்கை சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு கொழும்பு நகர சபைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

'இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தை கிழித்தெறிக!'

'இந்தோனேஷிய — சீன ஒப்பந்த அடிப்படையில் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட வேண்டும்'

தோழர் அஜீஸ் கருத்து

ஹட்டன் (கொழும்பு), மே 13—

"இந்தோனேஷியாவிற்கும்—சீனாவிற்குமிடையில் பாண்டுங் மாநாட்டின்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் உள்ள 8 லட்சம் இந்தியர்களின் அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கும் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வேண்டும்,"

—என்று, இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் தலைவரான ஏ. அஜீஸ் 15-வது வருடாந்திர மாநாட்டிற்குத் தலைமை தாங்குகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இப்போதுள்ள குடியுரிமைச் சட்டங்கள் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதால், அதை அழித்துவிட்டு, புதிய கொள்கைகளை வகுக்குமாறு இலங்கை சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"மக்களுக்குத் தங்களின் எதிர்கால அரசியலை நிர்ணயித்துக்கொள்ளுகிற உரிமையைத் தந்துவிடுவதுதான் ஒரே நியாயமான பரிகாரமாகும்;

"சுயநிர்ணய உரிமை என்பது மிக உயர்ந்ததொரு இலட்சியம்; அந்த இலட்சியம்பற்றி இலங்கைப் பிரதமர் பாண்டுங் மாநாட்டில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்;

"அந்த உரிமையை தன் நாட்டில் இருக்கும் ஒரு பகுதி மக்களுக்கு அவர் தர விரும்பாவிட்டால், காலனி மக்களுக்கு அந்த உரிமை கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்க முடியாது; அது தான் தர்க்கரீதியான நியாய வாதமாகும்,"

என்றும் தோழர் அஜீஸ் எடுத்துக் காட்டியுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—5—'55 சனி

இருள் நீங்கியது!

★

'இல்லை' என்றோராலேயே, 'இருக்கிறது இதோ! பெற்றுக்கொள்க! வாழ்க! வளர்க!!' என்ற வாழ்த்துக்களுடன் உலகத்து மண்ணில் ஓர் புதிய எல்லைக் கோட்டைக் கீறிக்கொண்டு, உலகப் படத்தில் இடம் பெற்ற நாடான பாகிஸ்தான், கடந்த பல மாதங்களாய் கொந்தளிக்கும் கடலாய், குமுறும் எரிமலையாய் காட்சி தந்து வந்தது.

தொல்லைகள், தொடர்காதையின் அத்தியாயங்கள் போல தொடர்ந்துகொண்டே இருந்தன; தொல்லைகளின் தொடர்ச்சி, பாகிஸ்தானின் அடிப்படையையே கேலிக்குரியதாக்கி விடும் சோக முடிவைப்பெற்றுவிடுமோ என்றஞ்சும் அளவு நிலைகள் வளர்ந்தன.

பாகிஸ்தான் பூரண குடியரசு நாடாக மலரும் முன்பே அதன் தந்தையான ஜின்னா இல்லாமற் போனார்; அவரைத் தொடர்ந்து, லியாகத் அலிகான் இல்லாமற் செய்யப்பட்டார்.

இந்த இருபெரும் தலைவர்களின் இல்லாமை, அந்தத் தொல்லைகளின் 'தொடர் நாவலின்' முன்னுரையாயிற்று.

விளைவு, எட்டாண்டுகள் ஆகியும், 'நம்மை நாமே ஆள்வது' என்ற உரிமையை நிரந்தரமாக நிலைநாட்டிக் கொள்வதற்கான 'நம்மை நாமே எப்படி ஆண்டு கொள்வது?' என்ற ஒரு அரசியல் திட்டத்தை வகுத்துக் கொள்ள பாகிஸ்தான் மக்களுக்கு முடியாமற் போய் விட்டது. இதற்கான காரணங்களை நாம் முன்பு எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

இருநூறுக்கும் மேற்பட்ட இடைவெளியுடன் இரு கூறுகளாக இயங்கும் பாகிஸ்தான் தலைவர்களிடை ஒற்றுமை இல்லாது போனதால், கவர்னர்-ஜெனரல், கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில், 'பாகிஸ்தான் நாட்டு மக்கள் எப்படி ஆளப்பட வேண்டும்,' என்பதை நிர்ணயிப்பதற்காகக் கூடிய அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தார்.

அதைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றியும், அவற்றின் தன்மை குறித்துங்கூட நாம் முன்பே எழுதியுள்ளோம்.

இறுதியாக, கவர்னர்-ஜெனரல், 'பெடரல்' நீதிமன்றத்திடம், 'தனது நிலை என்ன? தனது அதிகார வரம்பு என்ன?' என்று கேட்டிருந்தார்.

"நாட்டிற்குத் தேவையான சட்டங்களை உருவாக்கக்கூடிய புதியதொரு அரசியல் நிர்ணய சபை உருவாகும்வரை, நடைமுறையில் இருக்கும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தான் சட்ட பூர்வமாகச் செய்யக்கூடியது என்ன? மற்றும், புதிய அரசியல் நிர்ணய சபை ஏற்கனவே உள்ள சட்டங்கள் பலவற்றைப் பற்றி முடிவு செய்யும்வரை, தான் இருக்கிற அந்தச் சட்டங்களுக்கு உயிரூட்டும் தகுதியுடையவர்தானா?"—என்றெல்லாம் கேட்டிருந்தார்.

பலத்த விவாதத்திற்குப் பிறகு, "கவர்னர்-ஜெனரலுக்கு அரசியல் நிர்ணய சபையைக் கலைக்கிற அதிகாரமும், சட்டங்களுக்கு உயிர் தரும் அதிகாரமும் உண்டு," என்ற சாதகமான தீர்ப்பு, அவருக்கு, பெடரல் நீதிமன்றத்தில் கிடைத்திருக்கிறது.

'மேற்கு பாகிஸ்தானை ஒரே மாநிலமாக இணைக்க வேண்டும்' என்ற அரசாங்க முடிவு—அதற்கு ஏற்பட்ட அளவிடற்கரிய எதிர்ப்பு — கிழக்கு பாகிஸ்தானில் கவர்னரின் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்ட நடவடிக்கை—அங்கு, 'மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற ஆட்சி,' கோரி, எதிர் நடவடிக்கைகள் - பாகிஸ்தானின் இரு கூறுகளும், அரசியல் நிர்ணய சபையில் மோதிக் கொண்ட விரும்பத்தகாத காட்சிகள் — காஷ்மீர் விவகாரத்தில், அகதிகள் பிரச்சினையில் இந்தியாவுடன் நெடுநாட்களாக உள்ள தகராறு—அமெரிக்காவுடன் செய்து கொண்ட இராணுவ ஒப்பந்தம் கிளப்பிய எதிர்ப்புப் புயல்—இப்படியாகத் தொல்லைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன.

"அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது செல்லாது," என்று சிந்து நீதி மன்றம் தீர்ப்பளித்தபோது, பாகிஸ்தான் சட்ட மந்திரியுங்கூட, "குழம்பியுள்ள இந்தச் சூழ்நிலைக்கு வேறு ஒரு மாற்றுப் பரிகாரம், இராணுவ உதவியுடன் கவர்னர்-ஜெனரலே எல்லா சட்ட மன்றங்களையும் கலைத்துவிட்டு நேரடி ஆட்சியில் ஈடுபடும் ஒரு தனி மனித சர்வாதிகார ஆட்சியை நிறுவுவதுதான்" என்று அச்சத்துடன் கூறினர்.

அவரைப் போன்றவர்களும், பாகிஸ்தான் கடைபிடித்து வரும் வெளிநாட்டுக் கொள்கையை விரும்பாதோர் சிலரும் எதிர்பார்த்ததற்கு மாறாக, பெடரல் நீதிமன்றம், கவர்னர்-ஜெனரலின் நடவடிக்கைகளுக்குச் சாதகமாக தீர்ப்பளித்திருப்பதானது, அந்த நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டோருக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

கவர்னர் - ஜெனரல் அறிவித்துள்ளபடி, விரைவில் மக்களின் பிரதிநிதிகளால் ஒரு அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டு, பாகிஸ்தானின் எதிர்கால நல்வாழ்வு உறுதி செய்யப்படுவதற்கு, நல்லதோர் சூழ்நிலை தோன்றியுள்ளது.

மக்கள், விழிப்புணர்வுடனும், தலைவர்கள் பொறுப்புணர்வுடனும் பாகிஸ்தானின் நிரந்தர நல்வாழ்விற்கு வழி தேடுவதில் ஊக்கமுடன் முனைய வேண்டும்.

அங்கு, மக்களாட்சி மலர்ந்து, மணம் கமழ வேண்டும் என்பது நம் அவா!

இரண்டாவது இராமாயண 'கதாநாயகி?'

ஐதராபாத், மே 12—

தனது மனைவியின் ஒழுக்கத்தில் சந்தேகமுற்ற கணவன், தன் சந்தேகத்தைத் தெளிவு படுத்திக் கொள்ள 'அருமை'யான ஒரு 'சோதனை' நடத்தியிருக்கிறார்.

தனது சந்தேகத்திற்கு இலக்கான தனது மனைவியிடம், இரண்டு கைகளையும் கொதிக்கும் எண்ணெயில் விட்டுக் காட்டினால் தான் அவளை 'பரிசுத்த'மானவளாக தான் ஏற்றுக்கொள்ள முடியும் என்று கூறினாராம்!

அந்த 'பேதை'ப் பெண்மணியும் சொஞ்சமும் தயக்கம் காட்டாமல்—கணவன் சந்தேகத்தைத் தீர்ப்பதிலேயே கருத்துடையவளாக இருந்து உடனே தனது இரு கைகளையும் கொதிக்கும் எண்ணெயில் விட்டாளாம்!

அதன் பலன்—இரண்டுகைகளும் வெந்து சொப்பளித்துவிட்டன!

தகவலறிந்த அப்பெண்மணியின் பெற்றோர் உடனே துடிதுடித்து ஓடிவந்து அப்பெண்மணியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனராம்!

இராமநாதபுரம் மாவட்டத்தில்!

சிமெண்டிற்கான மூலப் பொருள்

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடனை தாலுகாவிலும், இராமநாதபுரம் தாலுகாவின் சில பகுதிகளிலும் சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருளான சண்ணாம்புக்கல் கிடைப்பதாகத் தெரிகிறது.

ஆனால், அந்தச் சுண்ணாம்புக்கல், 'பிளீச்சிங் பவுடர்,' அல்லது 'கால்ஷியம் கார்பைட்' போன்றவைகளைத் தயாரிப்பதற்கான முதல் தரம் பெற்றவையாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

மாணவர்களின் கிராமப் புனரமைப்பு வேலை

சென்னை, மே 12—

சென்னை மாநிலக் கல்லூரி, கலைக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 60 மாணவர்கள் திருக்கழுக்குன்றத்திற்கு அருகில் உள்ள செம்மேலி எனும் கிராமத்தில் கிராமப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

கிராமவாசிகளின் குடிசைகளுக்கு மண் பூசுவது, வெள்ளை அடிப்பது, வைக்கோல் பரப்புவது போன்ற வேலைகளைச் செய்வதென அம்மாணவர்கள் திட்டமிட்டுள்ளனராம்.

வளரும் மக்கள் தொகை!

அமெரிக்க மக்கள் தொகை மாதம் ஒன்றுக்கு $2\frac{1}{4}$ இலட்சம் அதிகரித்துக் கொண்டே வருகிறதாம். இப்படியே சென்றுகொண்டிருந்தால் 1977-ம் ஆண்டில் அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகை 30 கோடியாகும் என மதிப்பிடப் பட்டிருக்கிறதாம்.

நாள்தோறும் 5 லட்சம் கஜ துணி உற்பத்தி நஷ்டம்

கான்பூரில் நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தின் விளைவாக நாள்தோறும் சுமார் 5 லட்சம் கெஜம் துணி உற்பத்தி நஷ்டமேற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

என்றாலும், உற்பத்தியாளர்கள் அதுபற்றிக் கவலை கொள்ளவில்லையாம்!

அனேக ஆலைகளில், விற்பனையாகாத துணிகள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கிறதாம்!

மொத்த உற்பத்தியில் உள்ளூரில் உள்ள ஆலைகள் சுமார் 6 சதவிகிதம் உற்பத்தி செய்கின்றன.

'ஒரு மனைவிக்கு மேல் இரு மனைவி உடையோருக்கு ஓட்டு போடாதே!'

பாகிஸ்தான் பெண்களுக்குள் எகிப்து பெண் தலைவி வேண்டுகோள்

"ஒரு மனைவிக்கு மேற்பட்டு மணம் செய்துகொண்டுள்ளவர்களுக்கு வாக்குச் செய்ய வேண்டாம்,"

என்று, பாகிஸ்தானிலுள்ள மாதர் சங்கத்தின் உறுப்பினர்களை எகிப்து மாதர் சங்கத் தலைவியான டோரியா ஷாபிக் கேட்டுக்கொண்டுள்ளாராம்.

"இப்படிச் செய்வதன் மூலம், பெண்களுக்கான சமத்துவ உரிமை, பலதார மண ஒழிப்பு ஆகியவைகளை பெண்கள் வற்புறுத்த முடியும்,"

என்று அவர் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளாராம்.

★

முகமது அலியிடம் பாக். பெண்கள் தூது

முதல் மனைவியை ஒதுக்கினால் நடவடிக்கை!

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, தமது முதல் மனைவியான பீகம் ஆமீதியா முகம்மது அலிக்கு 'பாகிஸ்தானின் முதல் பெண்மணி' என்ற அந்தஸ்தை வழங்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக புதிதாய்த் தோன்றியுள்ள பாகிஸ்தான் பெண்ணுரிமைப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் 5 பேர் கொண்ட தூதுக் குழு ஒன்று முகமது அலியைச் சந்தித்து 90 நிமிட நேரம் உரையாடியதாகத் தெரிகிறது.

தூதுக் குழுவிற்கு, பாக். நிதி மந்திரியின் துணைவியார் பேகம் சௌத்ரி முகம்மது அலி தலைமை தாங்கிச் சென்றார்.

பாக். பிரதமர் இரண்டாம் திருமணம் செய்து கொண்டது, பாக். பெண்களை எவ்வளவு வருத்தத்திற்கு ஆளாக்கியுள்ளது என்பதையும் அவர்கள் எடுத்துக் கூறினராம்.

இதற்கு முன் ஒருமுறை, பிரதமரைச் சந்தித்த அந்தச் சங்கத் தூதுக் குழு, மே. 9-ந் தேதிக்குள், 'பிரதமர், இரு மனைவிகளையும் சமமாக நடத்துவதாக வாக்களிக்காவிடில் அந்த உரிமையைப் பெற சங்கம் 'இதர முறைகளை'க் கையாளும்" என்று கூறியிருந்தனர் என்றும், இப்போதும் முகம்மது அலி தங்கள் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காவிடில், சமூக நிகழ்ச்சிகளில் பாக். பிரதமரின் இரண்டாம் மனைவியை பகிஷ்கரிப்பது, கண்டன ஊர்வலம் நடத்துவது, ஆர்ப்பாட்டம் செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றும் அவர்கள் அறிவித்திருப்பதாயும் தெரிய வருகிறது.

'காஷ்மீர் சிங்கம்'

குடும்பத்திற்கு 'அலவன்ஸ்'

காஷ்மீரின் முன்னாள் பிரதமரான ஷேக் அப்துல்லா சுமார் ஒன்றேமுக்கால் ஆண்டுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டபோது அவரது குடும்பப் பராமரிப்பிற்காக காஷ்மீர் சர்க்கார் ரூ. 1,000 மாதப்படியாகத் தர முன்வந்ததும், அதைப் பெற்றுக்கொள்ள அவரது மனைவியார் பீகம் அப்துல்லா மறுத்ததும் நினைவிருக்கலாம்.

ஆனால் இப்போது அத்தொகையைப் பெற்றுக்கொள்ள அவர் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும், அத்துடன், சென்ற காலத்திற்கான மாதப் படியையும் சேர்த்துத் தரும்படியும் காஷ்மீர் சர்க்காரைக் கோரியுள்ளாராம்.

ஆனால் 20 மாதங்களுக்கு முன்னர் திருமதி பீகம் அப்துல்லா சர்க்கார் அளிக்க இருந்த மாதப் படியை வேண்டாமென்று மறுத்து விட்டதால், சட்டப்படி அவர் பழைய பாக்கியைக் கோரவோ அல்லது மேலும் படி தரப்பட வேண்டுமென்று கேட்கவோ முடியாதென காஷ்மீர் மாநில கணக்குத் தணிக்கை இலாகா ஆட்சேபணை செய்துள்ளதாகத் தெரிகிறது.

அண்மையில் பீகம் அப்துல்லா, தமது கணவர் ஷேக் அப்துல்லாவை சிறையில் சந்தித்துப் பேசிய பின்னரே இக்கோரிக்கையை அவர் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிகிறது.

'உபவாசம்' கட்டாயமல்ல!

கெய்ரோ, மே 12—

"ரம்சான் மாதத்தில், முஸ்லீம்கள் 'உபவாசம்' இருக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல" என்று இங்குள்ள அல் அஜார் இஸ்லாமிய பல்கலைக் கழகப் பேராசிரியர் ஷேக் பக்தித் என்பவர் அண்மையில் தெரிவித்திருப்பதை ஆராய்வதற்கு நான்கு 'உலேமா'க்கள் கொண்ட பரிசீலனைக் குழு ஒன்றை நியமிக்க அந்த பல்கலைக் கழகத்தின் தலைவர் உத்திரவிட்டிருக்கிறாராம்.

ஷேக் பக்தித், தாம் எழுதியிருந்த கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்ததாவது :—

"'ரம்சானை'க் கொண்டாட இயலாத நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் ஒதுக்கிடங்களில் மறைந்து உணவருந்துவதைப் பார்க்கலாம்; எனவே, சக்தியுள்ளவர்கள் மட்டும்தான் 'ரம்சானை' கொண்டாட வேண்டும்; அவ்வாறு கையாள முடியாத சக்தியற்றவர்கள் ஏழைகளுக்குப் பணமோ, உணவோ கொடுப்பதின் மூலம் 'அல்லா'விற்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்யலாம்."

மேற்கண்ட அவரது இந்தக் கருத்தை அப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'உலேமா'க்கள் பலமாக ஆட்சேபித்துள்ளனராம்.

தாக்கப்பட்டால்...?

"ஐரோப்பாவில் நிலவும் சமாதானத்திற்குப் பங்கம் ஏற்பட்டால்—சமாதானத்தை விரும்புகின்ற ஐரோப்பிய நாடுகள் மீது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் போர் தொடுத்தால் எங்கள் சர்க்காரும், 60 கோடி மக்களைக் கொண்ட எங்கள் நாடும், தாக்கப்படுகின்ற எங்கள் நேச நாடுகளுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பை எதிர்க்க இறுதிவரையிலும் போராடுவோம்."

இவ்வாறு, மக்கள் சீன பாதுகாப்பு இலாகா அமைச்சர் பெங்-டே-ஹூவே, வார்சாவில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகளின் மாநாட்டில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு

பொருளாதார நிறுவனம்

புதுடில்லி, மே 11—

மத்திய கிழக்கு பகுதிக்கு ஒரு பிரேதேச பொருளாதார நிறுவனம் காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் மாநாடு ஒன்று பெய்ரூட் நகரில் மே 25-ல் நடைபெறும் எனத் தெரிகிறது.

எகிப்து, ஈராக், ஜோர்டான், லெபனான், லிபியா, சவூதி அரேபியா, சிரியா, யேமன் போன்ற அராபிய நாடுகளால் இந்த மாநாடு கூட்டப்படுகிறது.

லெபனான் அரசாங்கம், இந்தியப் பேரரசிற்கு அனுப்பியிருந்த மாநாட்டிற்கான அழைப்பை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.

நல்ல சூழ்நிலை ஏற்படும்?

ஆந்திர மாநிலத்திலுள்ள அனந்தப்பூர் எஞ்சினீயரிங் கல்லூரியில் படிக்கும் தமிழ் மாணவரிடையே நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டியும், சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியமும் அந்தக் கல்லூரிக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அக் கல்லூரியில் படிக்கும் தமிழ் மாணவர்களை வெளியேற்றி சென்னைக்கு அழைத்து வருவதால் நல்ல சூழ்நிலை ஏற்படாதென்று ஆந்திர முதலமைச்சர் கருதுவதாகவும் அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

பகிரங்க இரகசியம்!

"அமெரிக்கா, சங்கிலிக்கோர்வை போல் தனது இராணுவ தளங்களையெல்லாம் விரிவுபடுத்திவருகிறது. அதிலும் குறிப்பாக, ரஷ்யா, மற்றுமுள்ள கம்யூனிஸ்டு நாடுகளின் எல்லைகள் அருகே அமெரிக்க இராணுவ தளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

"இந்த இராணுவ தளங்கள் அமைக்கப்படுவதினின்றும், எங்கள் நாட்டையும், சமாதானத்தை விரும்புகிற மற்ற நாடுகளையும் தாக்குவதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது என்பது பகிரங்க இரகசியமாக இருக்கிறது என்பது புலனாகிறது,"

என்று, சோவியத் ரஷ்யப் பிரதமர் புல்கானின், போலந்தின் தலைநகரான வார்சாவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு நாடுகளின் மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நிலச் சீர்திருத்தக் குழு நியமனம்

புதுடில்லி, மே. 12—

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்டுள்ள நிலக்கொள்கை எந்த அளவிற்கு நடத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதை பரிசீலிக்கவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொண்டு நிலம் சம்மந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கவும் நிலச் சீர்திருத்தக் குழு ஒன்றை திட்டக் குழு நியமித்துள்ளதாகத் தெரிகிறது.

குழுவில் அங்கம் வகிக்குமாறு அசோக் மேத்தா அழைக்கப்பட்டிருக்கிறாராம்.

தமிழ்நாடெங்கணும் மே தின விழா

ஆரணி

8—5—55 மாலை 6 மணிக்கு, தொழிலாளர் ஊர்வலத்துடன் பிள்ளையார் கோயில் திடலில் வந்து சேர்ந்ததும் தோழர் தசரதன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பா. சு. மணி, கா. மு. உமர், கோ. இராஜ ஜெயகரன் ஆகியோர் விழா குறித்தும், கழகக் கொள்கை குறித்தும் விரிவுரை ஆற்றினர்.

அறந்தாங்கி

8—5—55ல், மேதினம் கொண்டாடும் முறையில் தோழர் ஆர். அசோகன் தலைமையில் புகை வண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு வ. உ. சி. திடலை வந்தடைந்ததோடு கொடியேற்று விழாவும் நடைபெற்றது.

எருமப்பட்டி

8—5—55 காலை கழகப் பணிமனையில் தோழர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் கண்ணன் கொடியேற்றி வைத்து, மே தின விழா பற்றி சொற்பொழிவாற்றினார். பின்னர் தோழர் சி. வேணுகோபாலன் மே தின விழாவைப் பற்றி பேசினார். இறுதியில் இனிப்பு வழங்கப்பட்டது.

சூலூர்

8—5—55 காலை 10 மணிக்கு சண்முகதேவி டாக்கீசில் தோழர் எஸ். என். அற்புதசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எஸ். எஸ் இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆர். எஸ். மணியம் ஆகியோர் 'மே தினம்,' 'திராவிடப் பிரிவினை ஏன்?' என்னும் பொருள்கள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

செல்லப்பம்பட்டி

7—5—55 மாலை 6 மணிக்கு செல்லப்பம்பட்டி தி. மு. கழக சார்பில், கழகக் கட்டிடத்திற்கு முன்பு தோழர் பி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க இளங்கோ, மருதான், முத்துகிருஷ்ணன் ஆகியோர் மே தின விழா பற்றி நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். பின்னர், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கட்கு நன்றி தெரிவித்தும் புதிய பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேட்டுப்பாளையம்

8—5—55ல் 'எஸ். பி. நாடக அரங்கு' என்ற இடத்தில் நடைபெற்ற விழா கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் மே விழா குறித்துச் சொற்பொழிவாற்றினார். அன்று இரவு 10 மணிக்கு மேட்டுப்பாளையம் கலை வளர்ச்சி மன்றத்தாரால் தோழர் கி. மனோகரன் தலைமையில் 'இன முழக்கம்' என்ற நாடகம் நடைபெற்றது.

ஒரக்காட்டுப்பேட்டை

9—5—55 மாலை $7\frac{1}{2}$ மணிக்கு இளங்கோ நாடக மன்றச் சார்பில் (தி. மு. க.) தோழர் கே திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. டி. எஸ். மணி, அடைக்கலம், கே. வி முருகேசன், எஸ். கே. சுந்தரேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்று இரவு 10 மணிக்கு மேற்படி மன்றத்தாரால் 'பலிபீடம்'—நாடகம், தோழர் வகாப் தலைமையில் நடைபெற்றது.

குடந்தை

8—5—55 மாலை வெள்ளி விழாப் பூங்காவில் தோழர் சு பத்மனாபன் தலைமையில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் என். சி. பன்னீர்செல்வம், எஸ். ஆர். இராதா ஆகியோர் பேசிய பின், தோழியர் அருண்மொழி மே விழா குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

வீரக்கவுண்டனூர்

10—5—55ல், தி. மு. கழகக் கட்டிடத்திலிருந்து முக்கியமான தெருக்கள் வழியாக ஊர்வலம் நடைபெற்று, முடிவில் கழகக் கட்டிட மைதானத்தில், தோழர் பூ பச்சமுத்து தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ரா. ஆறுமுகம் மே தின விழாவின் சிறப்பு பற்றி பேசிய பின், தோழர் சீ. அண்ணாமலை 'நாட்டின் முற்போக்கும் பிற்போக்கும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

தக்கோலம்

11—5—55-ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் எஸ். கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, எஸ். ஜே. ராமசாமி ஆகியோர் மேதின விழா பற்றியும், வடநாட்டு ஆதிபத்தியத்தில் இருந்து நாம் பிரியவேண்டிய அவசியத்தையும் விளக்கிப் பேசினர்.

சென்னை

8—5—55 காலை 10 மணிக்கு முத்தமிழ் மன்றச் சார்பில், சாலை விநாயகர் கோவில் தெரு, எண் 17ல், தோழர் டி. கோவிந்தன் தலைமையில் மேதின விழா கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் ச ப. உத்தமன், ஆறுக்குமாங்கதன், இரா. மூர்த்தி, தெ. கணேசன், என். இராமதாஸ், மு மனோகரன், எஸ். எஸ். துரைசாமி, மு. பெருமான், ம. வெ. நடராசன், ம. ஆ இராமதாஸ் ஆகியோர் பேசினர்.

குன்னத்தூர்

10—5—55 மாலை 7 மணிக்கு, தோழர் க. அன்பரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே என். நடராசன், கண்ணன் ஆகியோர் சிறிது நேரம் சொற்பொழிவாற்றிய பின்னர் தோழியர் அருண்மொழி மே தின விழா குறித்தும், இன்றைய அரசாங்கத்தின் நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

சோழவந்தான்

8—5—55 இரவு $8\frac{1}{2}$ மணியளவில், மேற்கு வட்டார நெடுஞ்செழியன் படிப்பகச் சார்பில் தோழர் மா. வேலன் தலைமையில் நடைபெற்றது. மே தினம் குறித்துப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்ட பின்னர், சிறுருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

மண்மேடு

9—5—55ல், கழகப் பணிமனை திறப்பு விழவும், விழாழ் மே தின வும் தோழர் எஸ். ஆர் நடராசன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி, தீ. வி. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வேலூர் (வ. ஆ.)

8—5—55 மாலை, கோட்டை வெளியில், தோழர் மா. பா. சாரதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், சி. பி. சிற்றரசு, முல்லைசத்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

காடுகொண்டபள்ளி (பெங்களூர்)

9—5—55 மாலை 7 மணியளவில், தி. மு. கழக இன எழுச்சி நாடக மன்றத்தில், தோழர் பி. சேட் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கனகராஜ், மு கோ. ராஜி, வி. எம். மணியம் ஆகியோர் மே தினம் கொண்டாட வேண்டிய அவசியத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

கொலாபா—பம்பாய்

9–5–55 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு கூபரேஜ் திடலில் தி. மு. கழகச் சார்பில், தோழர் கே.கே. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற மேதின விழாவில், தோழர்கள் ஏ. எஸ். தாஸ், எஸ் கே. ராசு, க. சு. செகநாதன், எஸ். பி பெருமாள், கே. கே. இராமநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் பெரும்பணிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டும், புதிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொய்சேர்—பம்பாய்

1—5—55ல், தோழர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது தோழர் இரா. பொன்னுசாமி கொடியேற்றி வைத்துப் பேசிய பின், தோழர்கள் எஸ். எஸ். முத்தையா, எஸ். ஆர். அதிவீரன், கே. எஸ். சுப்பையா, து சே. அருணாசலம் ஆகியோர் மே தினத்தை விளக்கியும் தொழிலாளர்களின் அவலநிலை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

அறிவிப்பு

'நம் நாடு' தின இதழில் வெளியிடும் செய்திகளை ஆசிரியர் முகவரிக்கும், 'நம் நாடு' இதழுக்கு நன்கொடை, ஏஜண்டு டிபாசிட் தொகை-யில் பாக்கித் தொகை, சந்தாவுக்காக அனுப்பப்படும் செக், ட்ராப்டு, போஸ்டல் ஆர்டர், மணியார்டர் ஆகியவைகளை "பொறுப்பாளர் (மானேஜர்), 'நம் நாடு'" என்ற முகவரிக்கும் எழுதி அனுப்ப வேண்டுகின்றோம். தனிப்பட்டவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு செக், ட்ராப்டு, மணியார்டர் ஆகியவைகளை அனுப்பாதிருக்க வேண்டுகின்றோம்.

தி. மு. க. தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் கடிதங்கள், மணியார்டர் முதலியவைகளை பொதுச்செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

'நம் நாடு',
பொறுப்பாளர்

புதிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

அடுத்த ஜூலைத் திங்கள் முதல் ஆரம்பிக்கிற புதிய கல்வி ஆண்டிலிருந்து சென்னை மாநிலத்தில் 4 அல்லது 5 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் அமைப்பதென சர்க்கார் உத்தேசித்திருப்பதாக சென்னை மாநில கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

அமைக்கப்பட இருக்கும் புதிய கல்லூரிகளில் சுமார் 250 பேர்கள் வரையிலும் பயிற்சி பெறலாமென்றும், அக்கல்லூரிகளை எங்கெங்கு நிறுவுவது என்பது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்து சீக்கிரம் முடிவு செய்யும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

இந்தக் கல்லூரிகளைத் திறப்பதால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்கான வழி காணலாம் என்றும் நம்பப்படுகிறது.

இத்தகைய கல்லூரிகள் திறப்பது உட்பட்ட பல கல்வி சம்மந்தமான பிரச்சினைகள் குறித்து அமைச்சர், மாநில கல்வி இலாகா செயலாளருடனும், கல்விடைரக்டருடனும் ஆலோசனைகள் நடத்தி வருகிறாராம்.

கிராம அபிவிருத்தி வேலைத் திட்டம்

திட்டக்குழு அதிகாரிகள் முடிவு

கிராம அபிவிருத்திக்கான வேலைகளைத் திட்டமிடுவது, அவற்றை நிறைவேற்றி வைப்பது ஆகிய பொறுப்புகளை அந்தந்தக் கிராமங்களில் உள்ள பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இவைகளையெல்லாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையான கொள்கையைப் பின்பற்றி செய்ய வேண்டும் என்றும் இங்கு நடைபெற்ற திட்டக் குழு அதிகாரிகள் மாநாட்டின் 4-வது நாள் இறுதிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இம்முடிவுப்படி, பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றும், தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட கிராமங்களின் அபிவிருத்தி பொறுத்த வரையில் திட்டமிடும் பொறுப்பையும், அத்திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தப் பஞ்சாயத்துக்கள், அபிவிருத்தி வேலைகளுக்கு ரூ 2000 வரை செலவிடக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கும். அத்துடன், மேற்கொள்ளுகின்ற எந்த அபிவிருத்தி வேலையும் 3 ஆண்டுகளில் முடிவடையக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இதற்கு அந்தந்தக் கிராம மக்களே பணமாகவும், பொருளாகவும், உழைப்பாகவும் உதவி தர வேண்டும்.

நிரவாக சம்பந்தமாகவும் நிபுணர்கள் சம்பந்தமாகவும் சர்க்கார இயன்றவரை உதவி செய்யும் அதுவும், தேவைப்பட்டால்தான் இந்த உதவிகளை சர்க்கார் தருமாம்

நிலத் தீர்வை நேர்மையாயிருக்க!

பர்மா சர்க்கார் நடவடிக்கை

நிலத் தீர்வை நிர்ணயப் பிரச்சினையில் குடியானவர் பிரதிநிதிகளின் கருத்து முழுவதுமாக ஆலோசிக்கப்பட்டு, நிலத்திலிருந்து கிடைக்கும் உண்மையான இலாப அடிப்படையில் — நேர்மையான முறையில் தீர்வை விதிக்க பர்மா சர்க்கார் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'டிப்தீரியா' நோய்க்கு பாதுகாப்பு

குழந்தைகளுக்கு 'டிப்தீரியா' என்ற வியாதி பீடிக்காமலிருப்பதற்கான திட்டமொன்றை டில்லி நகர சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாண்டு மத்திக்குள் 10 ஆண்டுக்குக் குறைவாக உள்ள எல்லா குழந்தைகளுக்கும் 'டிப்தீரியா'வே வரவிடாமல் பாதுகாப்புத் தருவதே அத்திட்டத்தின் நோக்கமாம்.

புதுவை ஆலைகளுக்குச் சலுகை

கல்லூரிகளில் போதனா மொழியாக தமிழ்

சென்னை, மே 11—

சென்னை மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் போதனா மொழிப் பிரச்சினை குறித்து ஆலோசனை செய்து சர்க்காருக்குத் தனது சிபாரிசுகளைத் தெரிவிக்கும் பொருட்டு, வருகிற ஜூன் 18-ந் தேதியன்று கல்வி நிபுணர்கள் மாநாடொன்றை சென்னை மாநில சர்க்கார் கூட்ட இருக்கிறது.

தமிழ் மொழியில் சரியான—நேரிடையான கலைச் சொற்களைத் தயாரித்து, அவைகளை ஒரேமாதிரியாக்க இம்மாநாட்டில் ஒரு நிபுணர்கள் குழு அமைக்கப்படலாம் என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

முதலில் தமிழ்க் கலைச் சொற்களைத் தயாரித்து அத்திட்டம் எப்படி உருவாகிறது என்பதைத் தெரிந்துகொண்ட பின்னர், மலையாளம், கன்னட மொழிப் பிரச்சினைகளைக் கவனிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

ஆங்கில மொழியிலுள்ள சர்வதேச கணித, விஞ்ஞான கலைச் சொற்களையே இந்திய மொழிகளுக்கும் அப்படியே வைத்துக் கொள்வதில் அனுகூலம் இருக்குமா என்பதையும் நிபுணர் குழு பரிசீலிக்குமாம்.

ஏற்றுமதி வரி ரத்து

புதுச்சேரியிலுள்ள 3 துணி ஆலைகளுக்கு, அவை உற்பத்தி செய்யும் பருத்தித் துணிக்கு ஏற்றுமதி வரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப் பட்டிருப்பதாகவும், இந்த விதிவிலக்கு மே திங்கள் 1-ந் தேதியிலிருந்து 6 மாதங்கள் வரை அமுலில் இருந்துவரும் என்றும் தெரிய வருகிறது.

இந்தச் சலுகையின் காரணமாக, குறிப்பிடப்பட்டிருக்கும் ஆறு மாத காலம் வரைக்கும் அளவுக் கட்டுப்பாடு எதும் இல்லாமல் அந்த ஆலைகள் பருத்தி நூலையும் ஏற்றுமதி செய்யலாமாம்.

"தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலைதரவும், தொழில் மீண்டும் புத்துயிர் பெறவும் இச்சலுகைகள் பேருதவி புரியக் கூடியவையாக இருக்கும்" என்று பிரதம செயலாளர் வி. எஸ் மாத்யூஸ் இதுபற்றிய தமது கருத்தறிவிக்கையில் கூறியிருக்கிறார்.

அந்த 3 ஆலைகளும் சென்ற 1-ந் தேதி முதல் ஏறத் தாழ மூடப்பட்டுக்கிடந்தன என்றுதான் சொல்லவேண்டும்.

தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டு முழு சக்தியுடன் வேலை செய்யும்படி அந்த ஆலைகளிடம் பிரதம செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கோவா விடுதலை ஆர்வம்

போர்ச்சுகீசியப் போலீசாரின் 'பாதுகாப்பு' நடவடிக்கைகள்

பெல்காம், மே 13—கோவா விடுதலை இயக்க நடவடிக்கைகள் வர வர தீவிரமாகி வருவதாகக் கூறப்படுகிறது.

சேனாபதி பாபட்டும், கோரே யும் கோவா பிரதேசத்தில் நுழைந்து, 'சத்தியாக்கிரகம்' செய்யப் போவதாக அண்மையில் வெளிவந்துள்ள செய்தி கோவா விடுதலை இயக்கத்தவருக்கு மேலும் ஊக்கமளித்துள்ளதாம்.

அந்த இருவரும் — சேனாபதி பாபட், கோரே—கோவா எல்லைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில், போர்ச்சுகீசிய சர்க்கார், கோவா எல்லையில் ஆயுதந் தாங்கிய துருப்புகளை இரவு பகலாகக் காவலுக்கு வைத்துள்ளனராம்.

போலீஸ் சாவடிகளுக்கு தீ

சவந்தவாடியிலுள்ள இரண்டு போலீஸ் சாவடிகளை 'அடையாளந் தெரியாத' சிலர் தாக்கி தீ வைத்ததாகக் கூறப்படுகிறது.

நகரின் பல முக்கிய பகுதிகளிலும், கோவா விடுதலைப் போரில் சேரும்படி பொது மக்களைக் கேட்டுக்கொள்ளும் சுமார் 2,000 சுவரொட்டி வேண்டுகோள்கள் ஒட்டப்பட்டுள்ளனவாம்.

சேனாபதி பாபட்டும், கோரேயும் தங்களுடன் 45 தொண்டர்களுடன் கோவா சத்தியாக்கிரகத் திற்காகப் புறப்பட்டு விட்டனர். அவர்கள் கோவா செல்லும் வழியில் மீராஜுக்கு வந்து சேருகையில் அவர்களுக்கு 'வீர வரவேற்பு' அளிக்கப்பட்டதாம்!

ஆசிரியர் ஊதியம் பற்றி வாக்குறுதி

மாவட்டக் கழகங்களின் நிர்வாகத்திலிருக்கும் பள்ளிக்கூடங்களில் குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டக் கழகப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியம் மிகமிகத் தாமதித்துக் கொடுக்கப்படுவதாக சர்க்காருக்குக் கிடைத்துள்ள புகார்களின் பேரில், ஆசிரியர்களின் ஊதியத்தைத் தாமதப்படுத்தாமல் கொடுக்கும்படியும், அவசியமானால் சர்க்காரே அதற்கான பண உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் அறிவித்து உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கின்றனர் சென்னை சர்க்கார்.

இனிமேல் தாமதமில்லாமல் ஆசிரியர்களின் ஊதியங்களைப் பட்டுவாடா செய்வதாக மாவட்டக் கழகங்கள் சார்பாக உறுதிமொழி தரப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது

குடந்தையில் ஆசிரியர் பயிற்சி வகுப்பு

கும்பகோணம் சர்க்கார் கல்லூரியில் வருகிற ஜூலை மாதம் முதல் ஆசிரியர் பயிற்சி வகுப்பு ஆரம்பித்து நடத்த சர்க்கார் தீர்மானித்துள்ளனராம்.

சினிமா கொட்டகைக்கு தீ வைத்த ரசிகர்கள்

சினிமாக் கருவி கெட்டுப் போனதின் எதிரொலி

கல்கத்தா, மே 12—சினிமா நடந்துகொண்டிருக்கும் போது இடையில் சினிமாக் கருவி கெட்டுப்போய்விட்டதால், கோபங்கொண்ட சினிமா பார்க்க வந்திருந்தவர்கள், சினிமாக் கொட்டகைக்கே தீ வைத்து விட்ட தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இங்கிருந்து 14 மைல் தொலைவில் உள்ள சொரம்பூர் எனும் இடத்தில் இந்தச் சம்பவம் நடந்ததாம்.

பாதியில் சினிமா முடிந்து விட்டதால், ரசிகர்களில் ஒரு பகுதியினர் தங்களிடமிருந்து வசூலித்த கட்டணத்தைத் திருப்பித் தர வேண்டும் எனக் கேட்டனர். நிர்வாகிகள் மறுத்துவிடவே அவர்கள் கொட்டகையின் மீது கல்லெறிந்து தாக்குதலை ஆரம்பித்தனர்; இறுதியில், கொட்டகைக்கு தீயை மூட்டினராம்.

போலீசாரும், தீயணைக்கும் படையினரும் விரைந்து, தீயை அணைத்தனர் என்றாலும், கொட்டகையின் பெரும் பகுதி எரிந்து விட்டதாம்.

இதை ஒட்டி 15 பேர்கள் கைது செய்யப்பட்டனராம்.

சினிமா நடிகையின் கணவர்

வெளியேற்றப்பட உத்தரவு?

பிரபல ஹாலிவுட் நடிகையான லீனா ஹோர்னின் என்பவரின் மூன்றாவது கணவரான டிக் ஹேம்ஸ் என்பவரை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றுமாறு உத்தரவிடும்படி அமெரிக்க சர்க்கார் சட்ட இலாகா, நீதி மன்றங்களைக் கேட்டுக் கொண்டுள்ளதாம்.

டிக் ஹேம்ஸ், அர்ஜெண்டைனாவைச் சேர்ந்தவர் என்றும், அனுமதிச் சீட்டு இல்லாமலேயே அவர் அமெரிக்காவில் வசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கடலை சாகுபடி

நடப்பு ஆண்டில், கடலை சாகுபடி விஸ்தீர்ணம் 1,95,77,000 ஏக்கராவும், உற்பத்தி, 45,59,000 டன்னுமாக இருக்குமென்று தெரியவருகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் சிதம்பரம் வருகை

வரவேற்பு—பொதுக்கூட்டம்

★

17—5—55 மாலை 6 மணிக்கு, சிதம்பரத்தில், நகர மண்டப மைதானத்தில், தோழர் தில்லை வில்லாளன் தலைமையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்படும்.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கட்கு வரவேற்பும், தென்னாற்காடு மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் இரா. பாலகுருசாமி அவர்கட்கு நன்றியறிவிப்பும் நடைபெறும்.

விழாவில் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., சுரதா, பொ. சொக்கலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 39-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

14—5—55 இரவு 9 மணிக்கு கழகப் பணிமனையில் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

திருச்சி—பெரியநடைவீதி (நகர உட்கிளை) தேர்தல்

15—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, தோழர் எம் எஸ் மணி தலைமையிலும், மாவட்டச் செயலாளர் அன்பில் தருமலிங்கம் முன்னிலையிலும் கிளைக் கழகத் தேர்தல், கழகப் பணிமனையில் நடைபெறும்.

குறள் வகுப்பு

15—5—55 காலை 9 மணிக்கு, திருச்சி, பெரிய செட்டித்தெரு, எண் 1. பாண்டியன் படிப்பகத்தில், தோழர் தி ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திருமணம்

15—5—55 ஞாயிறு காலை 9 மணியளவில், தோழர் எம். கே. வீரராகவன்—தோழியர் புவனேஸ்வரி திருமணம் சென்னை புளியந்தோப்பு, எண் 8, அம்மாயம்மாள் தெருவில், தோழியர் சத்தியவாணி முத்து தலைமையில் நடைபெறும். தோழர் முகவை—ஆர்.எஸ். பாண்டியன், மற்றும் பலர் சிறந்தித்துத் திருமணம் பற்றிப் பேசுவர்.

கழகக் கூட்டம்

வைத்தீஸ்வரன்கோவில் மேலவீதியில்

17—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. உத்திராபதி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

என். கிட்டப்பா

கே. எஸ். சௌந்தரராசன்

சென்னை துறைமுகத் தொழிலாளர் மாநாடு

இத்திங்கள் 14, 15, 16 ஆகிய 3 நாட்களிலும் சென்னை, இராயபுரம் ஆல்பர்ட் ஜேசுதாசன் மைதானத்தில் நடைபெறும் மேற்படி மாநாட்டின் முதல் இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கும் தோழர் ப. ஜீவானந்தம் எம்.எல்.ஏ., தலைமை தாங்குவார். தோழர் சத்தியப்பிரிய பானர்ஜி மாநாட்டைத் துவக்கிவைப்பார். முதல் இரண்டு நாட்களிலும் தொழிலாளர்களுக்கென விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இறுதி நாளில் துறைமுகப் பெண், சிறுவர் தொழிலாளர்களின் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

இறுதி நாள் நடைபெறும் மாநாட்டை முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் திறந்து வைப்பார். மதுரை நகர சபை உறுப்பினர் தோழியர் கே. பி. ஜானகி தலைமை தாங்குவார்.

திரு. வேதநாயகம் நினைவு விழா

இத்திங்கள் 14, 15, 16 ஆகிய மூன்று நாட்களிலும் சென்னை—வண்ணை சர். தியாகராயர் கல்லூரியில், காலஞ்சென்ற மாயூரம் முன்னாள் முனிசீப் வேதநாயகம் அவர்களின் நினைவு விழா நடைபெறும். மூன்று நாட்கள் நிகழ்ச்சிகளும் முறையே சென்னை போலீஸ் கமிஷனர் எஸ். பார்த்தசாரதி, டாக்டர் அஜீசியா, கே. எஸ் ஏகாம்பரம் எம்.சி., ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

15—5—55 காலை 9 மணிக்கு, சென்னை முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலை விநாயகர் கோவில் தெரு முத்தமிழ் மன்றத்தில் தோழர் தெ. கணேசன் தலைமையில், 'உலகம் திருந்திய உத்தமர்கள்' என்னும் பொருள் பற்றி, மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

இராஜபுத்திரப் பெண் உடன்கட்டை ஏறினாம்

பிகானிர், மே 12—இறந்துபோனதனதுகணவனின் பிணத்துடன் 27 வயதுள்ள ஒரு இராஜபுத்திர பெண்மணி உடன் கட்டை ஏறிய சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளதாகச் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

செய்ய வேண்டிய மதச் சடங்குகள் அனைத்தையும் செய்து முடித்துக் கொண்டு அப்பெண்மணி எரிந்து கொண்டிருந்த பிணக் குழியில் தானும் குதித்து எரியுண்டு இறந்ததை, பக்கத்தில் நின்றிருந்த 300 கிராமவாசிகள் பார்த்துக்கொண்டிருந்தார்களாம்!

ரூ. 88 லட்சம் செலவில்!

விஜயவாடா ரயில் நிலையம் புதுப்பிக்கப்படும்

புதுடில்லி, மே 12—விஜயவாடா இரயில் நிலையத்தைப் புதுப்பிப்பதற்காக, சுமார் ரூ. 88 லட்சம் செலவில் திட்டமொன்றை இரயில்வே போர்டு அங்கீகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மலைமேலிருந்து மனைவியை உருட்டிய கணவன்?

பலத்த காயங்களுடன் மனைவி மருத்துவ மனையில்!

புனா, மே. 12—சிம்மகட் மலைக்கோட்டை மதிற் சுவரிலிருந்து உருண்டு விழுந்ததால், பலத்த காயமுற்று, மூர்ச்சையடைந்த நிலையில் சாசூன் மருத்துவ மனையில், கங்குபாய் சதாமா கோலபி எனும் 17 வயதுடைய பெண்மணி ஒருவர் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

அவர், மலைக்கோட்டைச் சுவரிலிருந்து உருண்டு விழுகையில் போட்ட அலறல் கூச்சலைக் கேட்டதும் பக்கத்தில் நின்றிருந்த சிறுவர்கள் அப்பெண்மணியை ஒரே போலீஸ் நிலையத்திற்குத் தூக்கிச் சென்றதாகவும், அங்கிருந்து ஒரே போலீசார் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இன்று காலை, மருத்துவ மனையில் மூர்ச்சை தெளிந்த அப்பெண்மணி, அதற்கு முந்தின நாள் தன்னுடைய கணவர் சிம்மகட் மலைக்கோட்டைக்கு வேடிக்கை பார்ப்பதற்காக அழைத்துச் சென்றதாகவும், மலைக் கோட்டைச் சுவரில் நின்றுகொண்டே இயற்கை அழகை ரசித்துக்கொண்டு நிற்கையிலேயே தன் கணவர் தன்னைப் பிடித்துத் தள்ளியதாகவும், அவ்வாறு மலைச்சரிவின் வழியே உருண்டு கொண்டிருக்கையில் தற்செயலாக ஒரு புதருக்குள் அகப்பட்டுக்கொண்டதால் காயங்களுடன் மூர்ச்சையுற்றுப் போனதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அவரது கணவன் தற்போது தலைமறைவாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மத்தியதரைக் கடலில்!

இந்தியக் கடற்படைப் பிரிவைச் சேர்ந்த ஆறு கப்பல்கள் இவ்வாண்டு கோடை காலத்தில், மத்திய தரைக் கடலில் பிரிட்டிஷ் மத்தியதரைக் கடற்படைப் பிரிவுடன் சேர்ந்து விமான நடவடிக்கைகளில் ஈடுபடும். ஆறுவார காலத்துக்கு நடைபெறவிருக்கும் இப் பயிற்சி நடவடிக்கைகளில், நீர்மூழ்கிக் கப்பல்கள், குரூய்சர்கள், நாசகாரிகள் முதலியவை பங்கு கொள்ளும்.

மொழிவழி மாநிலக் கோரிக்கை...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"எனவே, அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் உரிமையை பாதுகாத்துக் கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம்."

என்று, சிரோமணி அகாலிதள பொதுச் செயலாளரான கியானி—கர்தார்சிங் எம்.எல்சி, அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"பஞ்சாபி மொழிவழி மாநிலம் உட்பட மொழிவழி மாநில அமைப்புக்காக அமைதியாகப் போரிடும் உரிமையை நிலை நாட்டும் பொருட்டு, மாஸ்டர் தாராசிங், தக்க தருணத்தில் துவக்கியுள்ள இந்த பலாத்காரமற்ற இயக்கம், அதன் இலட்சியம் ஈடேறும் வரை தொடர்ந்து நடைபெறும்."

★

கிளர்ச்சி வலுக்கிறது

மொத்தம் 73 பேர் கைது!

இங்கு அமுலிலிருந்து வரும் தடையுத்தரவை மீறியதாக இன்று மேலும் 20 அகாலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் இதுவுடன் 73 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

சென்னை தொழிற்சாலையில் உள்ளிருப்பு வேலைநிறுத்தம்

சென்னை, மே 12—சென்னையிலுள்ள சி கோபால நாயகர் அண்ட் சன்ஸ் பேசின் பௌண்டரி (தொழிற்சாலை)யில், இன்று காலை முதல் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, அவை நிறைவேற்றப்படும் வரையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருவதாக மேற்படி தொழிற்சாலை சங்கத் தலைவர் ஜி. எம். மதுரையார் தெரிவித்திருக்கிறார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக அனுபவித்து இலாபம் அடைந்தும், தொழிற்சாலை முதலாளிகள் தங்கள் இலாப-நஷ்ட கணக்கைக் காட்டாததாலும், வழக்கமாக ஆண்டு தோறும் கொடுத்துவந்த 3-மாத போனஸ் தொகையை நிறுத்தி விட்டதாலும், மேலும், வழக்கமாக ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வந்த ஊதிய உயர்வைக் கடந்த நான்காண்டுகளாக நிறுத்தி விட்டதாலும்தான் தாங்கள் அதனை எதிர்த்து வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளதாகத்தும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும், அவ்வறிக்கையில், மேற்கண்ட தங்கள் குறைகளை அவ்வப்போது அரசாங்க அதிகாரிகளிடம் தெரிவித்தும் எவ்வித பதிலும் இல்லாமலிருப்பதால், தாங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்

'பார்வர்ட் பிளாக்' காங்கிரசுடன் சேரவில்லையாம்!

நாகபுரி, மே 13—'பார்வர்டு பிளாக்' என்ற பெயரில் சுபாஷ் சந்திர போசால் துவக்கப்பட்ட கட்சி, காங்கிரசில் சேர்ந்துவிட முடிவு செய்திருப்பதாக அறிவிப்புகள் செய்த மோகன்சிங், ஷீலாபாத்ரயாஜி என்ற இருவரையும் கட்சியிலிருந்து வெளியேற்றுவதென அகில இந்திய 'பார்வர்டு ப்ளாக்' கட்சியின் ஒரு கோஷ்டியினர் கூட்டிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

"வலிமை மிகுந்த சுபாஷ். போசின் தலைமையில், சரித்திர ரீதியான அவசியத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்ட 'பார்வர்டு பிளாக் கட்சி,' இந்தியாவில் சமதர்மக் குடியரசு ஆட்சி நிலைபெறும் லட்சியம் ஈடேறும் வரையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும்,"

என்றும் இன்னுமொரு தீர்மானம் நிறைவேறியுள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.